**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 60/2018 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **நாகராஜன்** |
| Father's / Husband Name | : | **செல்லப்பெருமாள்** |
| Address | : | **அம்மாபாளையம்** |
| Age | : | 58/2025 |

**<u>தேதி : 17.06.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் அம்மாபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் அம்மாபாளையத்தில் உரம், பூச்சி மருந்து கடை மற்றும் சிறியதாக Stationary கடை வைத்துள்ளேன். பட்டியல் சாட்சி மாதேஷ்வரனை தெரியும். அவர் அம்மாபாளையம் மெயின்ரோட்டில் மளிகை கடை வைத்துள்ளார். என்னுடைய கடைக்கு பின்பக்கம் என்னுடைய வீடு உள்ளது. 13.01.2018 அன்று காலை 4.00 மணிக்கு மாதேஷ்வரன் கடையினுடைய சட்டர் திறக்கும் சத்தம் கேட்டது. உடனே நானும், பக்கத்தில் கடை வைத்திருக்கும் வினோத், தர்மராஜ், ராமர், சின்னசாமி ஆகியோர்கள் சென்று பார்த்தோம். அப்போது மாதேஷ்வரன் உடைய மளிகை கடையின் சட்டர் திறந்திருந்தது. மாதேஷ்வரன் சட்டரை உடனடியாக மூடிவிட்டார். நாங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து சட்டரை திறந்து கடை உள்ளே சென்று பார்த்தோம். கடையின் உள்ளே வெங்கடாசலம் என்ற லாடபுரத்தை சேர்ந்த நபர் இருந்தார். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

எதிரியை எனக்கு ஏற்கெனவே தெரியும், பார்த்திருக்கிறேன். கடையின்சட்டரின் பூட்டை உடைத்து சட்டரை திறந்து கடை இருந்த பணத்தை திருட முயற்சி செய்திருந்தார். அவரை பிடித்து கட்டிபோட்டு போலீஸாரிடம் ஒப்படைத்தோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனது கடையில் ஏற்கெனவே ஒரு வாரத்திற்கு முன்பாக திருடுபோயிருந்தது என்றால்சரிதான். மற்ற சாட்சிகளான வினோத், தர்மராஜ் கடை வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களுடைய கடைகளில் பூட்டு உடைக்கப்படவில்லை என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. சட்டர் இரும்பு சட்டர் என்றால் சரிதான். இரண்டு பூட்டுகள் போட்டிருந்தது. சென்டர் பூட்டு போடப்படவில்லை. மாதேஷ்வரன்கடைக்கும், எனது வீட்டிற்கும் சுமார் 200 மீ தூரம் இருக்கும். மாதேஷ்வரன் சத்தம் போட்டவுடன் நான் சென்றுவிட்டேன். சத்தம்போட்டவுடன் உடனே 5 நிமிடத்தில் சென்றுவிட்டேன். நான் கடைக்கு செல்வதற்கு முன்பு ராமர், தர்மராஜ், வினோத் ஆகியோர் கடைக்கு முன்பாக இருந்தார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் சம்பவம் நடந்த அன்று காலை 8.00 மணிக்கு போலீஸார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. மாதேஷ்வரன் கடையில் எவ்வளவு பணம் வைத்திருந்தார் என்பது பற்றி எனக்கு தெரியாது. சட்டரை மூடியவுடன் போலீஸிக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். சட்டரை யார் திறந்தார் என்றால் நினைவில்லை. எதிரியின் கையை கட்டினோம். எத்னை மணிக்கு போலீஸிக்கு தகவல் சொன்னோம்எ ன்று தெரியாது, காலை 8.00 மணிக்கு போலீஸார் வந்தார்கள்.

மாதேஷ்வரன் கடைக்கு பக்கத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். லாடபுரத்தில் கடை இல்லை என்றாலும், அம்மாபாளையத்தில்தான் கடை உள்ளது என்றாலும் சரிதான்.அம்மாபளையம் பேருந்து நிறுத்தத்தில் இருந்துதான் லாடபுரம் செல்லவேண்டும் என்றால் சரிதான். சட்டரின் பூட்டை

உடைத்தது எனக்கு தெரியாது, நான் பார்க்கவில்லை. எதிரி லாரியின் ட்ரைவர் என்றாலும், இரவு ரநேரத்தில் அம்மாபாளையம் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி கடைக்கு முன்பாக ஊருக்கு செல்வதற்காக உட்கார்ந்திருந்தவரை நாங்கள் திருடன் என்று நினைத்து பிடித்து அவரை கட்டிபோட்டு அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. எதிரி கடையை உடைக்கவில்லை என்றாலும், திருட முயற்சி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியை கடைக்கு உள்ளே வைத்து பூட்டியிருந்தால் போலீஸ் வந்தபிறகு திறந்திருப்போம் என்றாலும், எதிரியை கடையில் வைத்து பூட்டவில்லை என்றாலும்சரியல்ல.

எதிரியை நாங்கள் அடித்துவிட்டதால் இரண்டு ஊர்களுக்கு இடையே பிரச்சனை வரும் என்பதால் போலீஸார் சொன்னதன் அடிப்படையில் மாதேஷ்வரன் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சட்டரை திறந்துபார்த்தபோது எதிரியின் கையில் ஆயுதம்இருந்ததை நான் பார்க்கவில்லை. வெளியில் கடந்ததாக சொல்லப்படும் ஆயுதங்களை போலீஸார் எடுத்துசென்றார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.